**Before the National Green Tribunal South Zone Chennai**

**Original Application No 80of 2021**

**IN THE MATTER OF**

Tribunal on its own motion *suo moto* based on the newitem in the Times of India Newspaper, Coimbatore Edition addition dt. 14.02.2021, "*stench from check dam makes life miserable*"

Applicant

**Versus**

*The Principal Secretary to Government*

*Public Works Department Chennai and others*

Respondents

---

**Report bythe seventhrespondent,Mr K Veerapandiyan, No. 4 VeerapandiTown Panchayat Executive Officer**

---

I, Mr K Veerapandiyan son of Mr Kurusamy, aged 58 years, Executive Officer at the seventhRespondent Town Panchayat having office at 48 Kamaraj Road, Naickenoor, VeerapandiCoimbatore 641019 report as follows:

1. Respondent town panchayat is 22kilometres away from Coimbatore city, in the state of Tamil Nadu. According 2011 census, total population in this town panchayat werearound 18421 Current population is around 25,500 and 18 wards. There are three

Executive Officer
No.04, Veerapandi Town Panchayat
Coimbatore - 641 019

hamlets within our town panchayat, namely Press Colony, Naickenoor and KunjamPalaya,.There are nearly 8150 houses in this town panchayat. It is important to note, that our office did not receive orders from this Honourable Tribunal, as I understand, address entered for seventh respondent is regarding to another Veerapandi Town Panchayat in Theni District. I request the Honourable Tribunal to amend our address accordingly.

2. I submit to the Hon'ble Tribunal that our town panchayat is strictly adhering to the solid waste management rules. Our town panchayat has 41 regular fulltime staff and 51 self-help group members in order to collect domestic and commercial wastegenerated nearly 4.750 metric tonne on daily basis from Monday to Saturday every week. Following vehicles are engaged for the above:

   Tractors: Two

   Mini-auto: One

   Battery operated: Two

3. I humbly submit that the collected waste is taken to the Resource Recovery Park, where the waste is segregated into bio-degradable and non-biodegradable. Bio-degradable waste sold as manure to farmers at large quantity and smaller quantities are sold to residents, who have garden at their houses. Non-biodegradable waste, such as plastics and bottles are sold to traders'at large quantity. This process is generating little income to our town panchayat.

Executive Officer
No.04, Veerapandi Town Panchayat
Coimbatore - 641 019

4. I humbly submit that, our town panchayat's policy in relation to planning permission for building houses mandate since 2000,that an applicant should have septic tank and rain water harvest facility at their proposed building site. Furthermore, applicant should construct soak pit at their house in order to drain their domestic wastewater. If these conditions are not met with the applicant, no permission will be granted by our town panchayat.

5. I humbly submit that the liquid and solid waste collected from septic tanks were taken to Faecal Sludge Treatment Plant at Ward 5, Athi Palayam Road Resource Recovery Park. Total area of this park is 1.5 acres and its per day capacity is 25000 KLD. This treatment plant commenced its operation since 2018. This project was funded Bill and Melinda Gates Foundation. Recycled water from this plant is used for the nearby park.

6. I humbly submit that in order to treat the water runs throughEzhuErumaiPallam, which is situated in our town panchayat, a scheme has been approved by the Government, which is known as *Bio-remediation Techniques Phytoremediation Constructed with Wetlands*. Total cost for this project is Rs 4.20 lakhs and constructionis currently ongoing at present. (Please see the annexed document in Tamil and the Photos)

7. I humbly submit that our town panchayat is included in "Cauvery Rejuvenation Project" and Rs 3.30 crore is allocated in order to establish treatment plant.

8. I respectfully submit that, often domestic wastewater at a small quantity is being mixed with the stream water. Our town panchayat is taking all necessary steps to

Executive Officer
No.04, Veerapandi Town Panchayat
Coimbatore - 641 019

prevent domestic wastewater is being mixed with stream water. It is important to note, most of the time, only rainwater runs in EzhuErumaiPallam.

9. I humbly submit to the Tribunal, that when the undergoing project is completed, (Bioremediation/Phyto remediation), no wastewater will be discharged into mainstream.

Hence, in the above circumstances, it is respectfully prayed that the National Green Tribunal South Zone may be pleased to pass orders or other orders may be deemed fit and proper according to the circumstances and thus render justice.

Signed:

Date: 22.11.21

**Verification**

I, Mr K Veerapandiyan, Executive Officer at tthe seventh respondent herein do hereby verified the contents of this Report and they are true to my personal knowledge based on the records and I have not supressed any facts.

Signature:

Official stamp: Executive Officer No.04, Veerapandi Town Panchayat Coimbatore - 641 019

அனுப்புநர் :

திரு.கு.வீரபாண்டியன்,
செயல் அலுவலர் (பொ), நெ.4.வீரபாண்டி
[redacted] பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641020.

பெறுநர்:

பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள்,
7வது மற்றும் 8வது தளம்,
நகர் நிர்வாக அலுவலக கட்டிடம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

வழி:-
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோயம்புத்தூர்–18.

ந. க. எண் : 220 / 2021 நாள்: 19.11.2021

அய்யா,

பொருள் : வழக்கு– தேசிய பசுமை தீர்பாயம் – கோயம்புத்தூர் மாவட்டம் – எண்.04.வீரபாண்டி பேரூராட்சி – ஏழு எருமை பள்ளம் ஓடையில் கழிவுநீர் செல்வது – தேசிய பசுமை தீர்பாயம் அசல் விண்ணப்பம் எண்.80 of 2021 (SZ) மீது நாளது தேதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தேசிய பசுமை தீர்ப்பாயம் விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.14.02.2021.
2. தேசிய பசுமை தீர்பாயம் தெற்கு மண்டலம், சென்னை விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.19.05.2021
3. தேசிய பசுமை தீர்ப்பாயம் தெற்கு மண்டலம், சென்னை விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.07.08.2021.
4. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மு.மூஎண்.1048/2021/பே1 நாள்.17.08.2021
5. எண்.04.வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் நாள். .11.2021
6. பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் நகர் நிருவாக அலுவலக கட்டிடம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12090/2021அ5 நாள்.16.11.2021

* * * * *

பார்வை 1–ல் காணும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் விண்ணப்பத்தில் எண்.04.வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட சிவா நகர் பகுதிக்கு அருகில் உள்ள ஓடையில் செல்லும் கழிவுநீரால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு, நோய்தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்து 14.02.2021 ஆம் தேதிய Times of India நாளிதழ் "Stench from check dam make life miserable" என்ற செய்தி வெளியானதின் அடிப்படையில் தேசிய பசுமை தீர்பாயம் தானாக முன்வந்து அசல் விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.14.02.2021–ன்படியான உத்திரவில் இப்பொருள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது துணை ஆட்சியர் பதவிக்கு குறையாத பதவியில் உள்ள அலுவலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் மற்றும் நீர்வள ஆதார அமைப்பு அலுவலர் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலரை கொண்டு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொண்டு 16.04.2021 ஆம் தேதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சி பகுதியில் உள்ள 8150 குடியிருப்புகளிலிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 41 எண்ணிக்கை தள்ளுவண்டி மூலம் 51 சுய உதவிக்குழு பணியாளர்களால் மற்றும் பேட்டரி வாகனம் 2 எண்ணிக்கை, மினி ஆட்டோ 1 எண்ணிக்கை தினசரி வீடு வீடாக சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரித்து 4.750 மெட்ரிக் டன் குப்பைகள் முதல் நிலை சேகரம் செய்யப்படுகிறது. 2 எண்ணிக்கை டிராக்டர் வாகனம் மூலம் இரண்டாம் நிலை சேகரம் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு சொந்தமான உரப்பூங்காவிற்கு (RR Park) கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளை பஞ்சகாவிய முறையில் இயற்கை உரமாக தயாரிக்கப்படுகிறது. தயாரிக்கப்படும் உரங்களை விவசாயிகளுக்கும் வீட்டுத்தோட்டம் அமைக்கும் நபர்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

த.பி.பா.

இப்பேரூராட்சிக்குப்பட்ட பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் தனியார் வீடுகளில் சேகரம் ஆகும் கழிவுநீரினை பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 அத்திப்பாளையம் ரோடு வளமீட்பு பூங்கா அருகில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் 1.50 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, Bill and Melinda Gates Foundation(BMFG) நிறுவனத்தாரின் நிதி உதவியுடன் ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் IIHS, TSU, TNUSSP மற்றும் கீ ஸ்டோன் நிறுவனத்தார்கள் மூலம் விரிவான திட்ட கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, மேற்படி இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் 25000 கிலோ லிட்டர் கொள்ளவில் அமைக்கப்பட்டு, தற்போது பராமரிப்பில் இருந்து வருகிறது. எண்.04.வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் தனியாக செப்டிக் டேங்க் அமைத்து அதில் சேகரமாக கசடு கழிவுகளை வாகனம் மூலம் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று சுத்திகரிக்கப்படுகிறது. வீடுகளிலிருந்து வெளியேறும் கசடு கழிவு இவ்வோடையில் செல்வதில்லை.

மேலும், இப்பேரூராட்சியில் உள்ள தெருக்களில் ஒருசில தெருக்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் மட்டுமே இவ்வோடையில் கலக்கும் வகையில் உள்ளது. எஞ்சிய தெருக்களில் உள்ள வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் நீரானது பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி பகுதியில் செயல்பட்டுவரும் வாகனம் மூலம் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று சுத்திகரிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி ஓடையில் செல்லும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய நடந்தாய்வாழி **காவேரி"** திட்டத்தில் இப்பேரூராட்சியை சுற்றியுள்ள கூடலூர் பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.7.70 கோடி, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.5.50 கோடி மற்றும் எண்.04.வீரபாண்டி பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.3.30 கோடியிலும், அந்தந்த உள்ளாட்சி பகுதியில் சேகரம் ஆகும் மொத்த கழிவுநீரையும் சுத்திகரிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்ட நீரினை அப்பகுதிகளின் வழியாக வரும் இவ்வோடையிலேயே கலக்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு மைய திட்டத்தில் அமையப்பெற்றுள்ளது.

மேலும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் மனுவில் சுட்டிக்காட்டியுள்ள இப்பேரூராட்சி வழியாக செல்லும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய **"நடந்தாய்வாழி காவேரி"** திட்டத்தில் பணிமேற்கொள்ளப்படும் காலம் வரை, தற்போது தற்காலிக ஏற்படாக பேரூராட்சியின் மூலம் சுத்திகரிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் விண்ணப்பத்தில் எண்.04.வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட ஏழு எருமை பள்ளம் ஓடையில் செல்லும் கழிவுநீர் தொடர்பாக 27.08.2021–ம் தேதி காலை 10.30 மணிக்கு காணொளி தொலைக்காட்சி மூலம் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதினை தொடர்ந்து, பேரூராட்சி மூலம் கீழ்க்கண்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேற்படி இடத்தில் Bio-remediation Techniques Phytoremediation, Constructed with Wellands in Ward No.2 Burial Ground Near pallam பணியினை ரூ.4.20 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள பார்வை–4ல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிருவாக அனுமதி பெறப்பட்டு 09.09.2021 மற்றும் 28.09.2021ம் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் மூன்றாவது அழைப்பில் கடந்த 16.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. 31.12.2021க்குள் இப்பணியானது முடிவடையும் என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இணைப்பு : புகைப்பட நகல்

செயல் அலுவலர் (பொ),
எண்.04.வீரபாண்டி பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641019.

கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.கோ.துவாரகநாத்சிங்

ந.க.எண்.1062/2021/பே1 நாள். 17.08.2021

பொருள் : பொதுநிதி 2021–2022 – பேரூராட்சிகள் நிர்வாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – எண்.04 வீரபாண்டி பேரூராட்சி – அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி அளித்து ஆணை பிறப்பித்தல் தொடர்பாக.

பார்வை :
1. தனி அலுவலர், எண்.04 வீரபாண்டி பேரூராட்சி அவர்களின் முன் அனுமதி நாள்.16.08.2021
2. எண்.04 வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலரது கடிதம் ந.க.எண்.220/2021, நாள்.16.08.2021
3. அரசாணை (ப) எண்.166 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 12.04.2008

-----

உத்திரவு :

கோயம்புத்தூர் மாவட்டம், எண்.04 வீரபாண்டி பேரூராட்சியில் பார்வை1–ல் காணும் விவரப்படி தனி அலுவலர், எண்.04 வீரபாண்டி பேரூராட்சி அவர்களின் முன் அனுமதி மற்றும் பார்வை 2–ல் காணும் செயல் அலுவலரது முன்மொழிவு ஆகியவற்றின் பேரில், 2021–2022 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தில் பின்வரும் பணியினை மேற்கொள்வதற்கு பார்வை 3–ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் நிர்வாக அனுமதி அளித்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Bio-Remediation Techniques Phytoremediation, Contructed with wetlands in Ward No.2 Burial Ground Near Pallam at No 4 Veerapandi Town Panchayat | ரூ.4.20 |

நிபந்தனைகள் .

1 இப்பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உதவி செயற்பொறியாளரிடம் தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

2 இப்பணி விபரங்களை பேரூராட்சியின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேடு மற்றும் திட்டப் பேரேடு ஆகியவற்றில் பதிவு செய்யப்பட வேண்டும்

3 1998 ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் 2000ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகள் ஆகியவற்றின் தொகுத்தளிக்கப்பட்ட நடைமுறைகளை தவறாமல் பின்பற்றி, இப்பணியினை செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தீர்வு செய்யப்பட வேண்டும்.

4 ஒரு ஒப்பந்தப்புள்ளி பெற்று பிரித்து செய்யப்படுவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

5 பேரூராட்சி மன்ற நிர்வாகிகளின் உறவினர்களுக்கு ( தாய் தந்தை, சகோதரன், மனைவி, சகோதரி முதலானவர்கள்) பணிகள் ஒப்படைப்பதை தவிர்க்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியின் மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.

7 இப்பணியானது சம்மந்தப்பட்ட பேரூராட்சிக்கு சொந்தமான அல்லது மேவியுள்ள புறம்போக்கு நிலத்தில் மட்டுமே நடைபெறுவதை செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் உறுதி செய்ய வேண்டும்.

8 இப்பணிகளுக்கான செலவினம் மேற்கொள்வதற்கு இப்பேரூராட்சியின் நடப்பாண்டு வரவு செலவு திட்டத்தில் க.கு.எண்.2040-ல் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை செயல் அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

9 இந்த அனுமதியின் மூலம் உருவாக்கப்படும் மூலதன சொத்துக்களை முறையாக சொத்தாக்கம் செய்யப்பட வேண்டும்.

10 இப்பணியின் பொருட்டு எதிர்காலத்தில் தணிக்கையில் தடைகள் ஏதேனும் எழுப்பப்படின், அத்தகைய தடைகளுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைமுறைநூல் தொகுதி 2-ல் குறித்துரைக்கப்பட்ட விகிதாச்சாரப்படி சம்மந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களே பொறுப்பாவார்கள்.

11 இப்பணி மேற்கொள்வதினால் சட்ட ரீதியான சிக்கல்கள் எழும்பட்சத்திலும், நீதி மன்ற உத்தரவு நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் பட்சத்திலும் அல்லது இன்னபிற காரணங்களுக்காகவும் இந்த ஆணையினை ரத்து செய்வதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

12 இப்பணி துவங்கும் முன்னர், நடைபெறும் போது மற்றும் முடிவுற்ற பின்னர் ஆகிய மூன்று நிலைகளில் வண்ணப் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

13 எந்தவொரு வேலைக்கும் முன்பணம் கட்டாயம் வழங்கக் கூடாது

14 இவ்வாணையின் விவரங்கள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் நிர்வாக அனுமதி வழங்கும் பதிவேடு பக்கம் எண். 346 முதல் 365-ல் பதியப்பட்டுள்ளது.

15. இதில் முரண்படும் செயல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
கோயம்புத்தூர் மண்டலம்.

பெறுநர் :
செயல் அலுவலர்,
எண்.04 வீரபாண்டி பேரூராட்சி

நகல் : உதவி செயற் பொறியாளர், (பேரூராட்சிகள்), கோயம்புத்தூர் மண்டலம்.
நகல் : இளம்/உதவி பொறியாளர் எண்.04 வீரபாண்டி பேரூராட்சி

# எண்.04.வீரபாண்டிபேரூராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (மூன்றாம் அழைப்பு)

**ந.க.எண் – 220 / 2021** **நாள்.10.11.2021.**

1. எண்.04.வீரபாண்டி பேரூராட்சியில் செய்து முடிக்கவேண்டிய அடியிற்கண்ட வேலைகளுக்கு மூடிமுத்திரை செய்த டெண்டர்கள் வரவேற்கப்படுகிறது.
2. டெண்டர்கள் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சதவிகிதம் மற்றும் ஷெட்யூல் டெண்டர்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
3. டெண்டர்கள் எண்4.வீரபாண்டி பேரூராட்சி அலுவலகத்தில் மேற்படி பேரூராட்சியின் செயல்அலுவலர் அவர்களிடமாவது அல்லது அவரது உத்திரவு பெற்றவர்களிடமாவது 16.11.2021 தேதிகாலை / மாலை 3.00 மணிக்குள்ளாக கொடுக்க வேண்டும்.
4. டெண்டருடன் ஒவ்வொரு வேலைக்கும் தயாரிக்கப்பட்டிருக்கும் மதிப்பீட்டின் தொகையில் 2 சதவிகிதம் டெபாசிட் தொகை பேரூராட்சி அலுவலகத்தில் 16.11.2021–ம் தேதிகாலை / மாலை 3.30 மணிக்குள் செலுத்தி ரசீதை டெண்டருடன் இணைத்து கொடுக்கவேண்டும். டெண்டர் டெபாசிட் மற்றும் வருமானவரி, விற்பனைவரி கட்டியதற்கான அத்தாட்சிகளை டெண்டர் பாரத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் அல்லதுமேலே குறிப்பிட்டுள்ள வரியினங்களில் தங்களால் செலுத்தப்படவேண்டியது ஏதும் இல்லை எனசம்பந்தப்பட்டவர்கள் எழுத்து மூலமானஅத்தாட்சி வழங்க வேண்டும்.
5. டெண்டர்கள் 16.11.2021 –ம் தேதிகாலை / மாலை 3.30 மணிக்கு வந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திறந்து பார்த்து ஏற்றுக் கொள்ளப்படும் விஷயம் முடிவுசெய்யப்படும்.
6. டெண்டரை ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்ததாரருடைய டேவணித் தொகையை பேரூராட்சி தீர்மானைத்திற்குப் பின், வாபஸ் செய்யப்படும் டெண்டர் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருடைய டேவணித் தொகையை விதிமுறைகளின் படி வேலை முடித்துகடைசியில் தொகை கொடுத்த பின்பு மேற்படி பில் தணிக்கையாகி தணிக்கை குறிப்பு வந்த பிறகு டேவணித் தொகை திரும்ப வழங்கப்படும்.
7. எந்த டெண்டர்களையும் யாதொரு காரணமும் காட்டாமல் தள்ளுபடி செய்வதற்கு செயல்அலுவலர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.
8. வேலைகளுக்குரிய மதிப்பீடகளை எண்4.வீரபாண்டிபேரூராட்சி அலுவலகத்தில் விடுமுறை நாட்கள் தவிர மற்றநாட்களில் காலை10.30 மணி முதல்மாலை 5.00 மணிக்குள்பார்த்துக் கொள்ளப்படும்.
9. டெண்டர்தாரர் வேலைகள் மதிப்பீட்டு தொகையில் நூற்றுக்கு எத்தனை சதவிகிதம் அதிகமாக அல்லது குறைவாக செய்து கொடுக்க ஒப்புக்கொள்கிறார் என்று டெண்டரில் எழுத்தால் எழுதிடல் வேண்டும்.
10. டெண்டர்தாரர் ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைகளை செயல்அலுவலர் அல்லது மேலளவு செய்யும் அதிகாரிகளுக்கு திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும். அதன்படி செய்யத் தவறினாலும் அல்லது வேலைகளை செய்து முடிக்கவோ, அல்லது சாமான்கள் சப்ளை செய்ய வோகாலதாமதம் ஏற்பட்டால் டெண்டர்தாரருக்கு முன்னறிக்கையின்றி மேற்படி வேலைகளை வேறுநபர்களைக் கொண்டோ அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாகவோ செய்துமுடித்து அதனால் பேரூராட்சிக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அந்தநஷ்டத்தை டெண்டர்தாரரிடமிருந்து ரொக்கமாகவோ அல்லது அவர் கட்டியிருக்கும் டேவணித் தொகையிலிருந்தோ வசூலிக்கப்படும்.
11. ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைகளை செயல்அலுவலர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட காலஅளவிற்குள் சப்ளைசெய்து முடிக்கத் தவறினாலும் சாமான்களை திருப்திகரமாக நிர்ணயிக்கப்பட்டகால அளவிற்குள் சப்ளை செய்யத் தவறினாலும் தக்கபடி அபராதம் விதிக்க செயல்அலுவலர் அவர்களுக்குஅதிகாரமுண்டு, அதன்படிவிதிக்கப்படும் அபராதத் தொகையை ஒப்பந்ததாரருக்கு சேரவேண்டியபில் தொகையிலிருந்தோ அல்லது டேவணித் தொகையிலிருந்தோ பிடித்தம் செய்து தரப்படும்.
12. செயல்அலுவலர் அவர்களால் வாங்கப்படும் டெண்டர்கள் எண்4.வீரபாண்டி பேரூராட்சியின் மன்றத் தீர்மானத்திற்கும் அங்கீகாரத்திற்கும் உட்பட்டதாகும். அதைப் பற்றி கேட்கடெண்டர்தாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அப்படிக் கேட்டாலும் அதுசெல்லத்தக்கதல்ல.
13. டெண்டர்களைஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவாரகால அளவிற்குள் ஒப்பந்ததாரர் தன் சொந்தசெலவில் ரூ.20 மதிப்புள்ளமுத்திரைத் தாளில் (ஸ்டாம்புபத்திரம்) ஒப்பந்தம் ஒன்றுஎழுதிக் கொடுக்கவேண்டும்.
14. ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கத் தவறினாலும் குறிப்பிட்டகால அளவிற்குள் வேலைகளை செய்து முடிக்கத் தவறினாலும் ஒப்பந்ததாரரைரத்து செய்து, மேற்படி வேலைகளுக்கு மறு டெண்டர் வாங்கப்பட்டு அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாக வேலைகளைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்யப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் முதல் டெண்டர்தாரரே பொறுப்பாவார். அதன்படி ஏற்படும் நஷ்டத்தை முதல் டெண்டர்தாரருக்கு சேரவேண்டிய பில்தொகை அல்லது டேவணித் தொகை அல்லது இரண்டு அயிட்டங்களிலிருந்து வசூல் செய்ய செயல்அலுவலர் அவர்களுக்கு அதிகாரமுண்டு. இது விஷயமாக செயல்அலுவலர் அவர்களுடைய செய்கைதான் முடிவானது அதைப் பற்றி கேட்கவோ அல்லது தாவா செய்யவாவது முதல் டெண்டர்தாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.
15. டெண்டர்தாரரால் செய்யப்படும் வேலைகளும் சப்ளை செய்யப்படும் சாமான்களும் விதிமுறைகளின் படி சம்பந்தப்பட்ட அதிகாரி அவர்களால் அளவெடுக்கப்பட்டு, மேலளவு செய்யப்பட்ட பின்புதான் உரியதொகை வழங்கப்படும்

16. டெண்டர்களுக்கான ஷெட்யூல்படிவங்களை உரியதொகை செலுத்தி **15.11.2021** தேதிக்குள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**உயிரியல் மேம்பாட்டு கட்டமைப்பு திட்டத்தில் (பொதுநிதி வேலை) 2021–2022**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. (1%) | செட்யூல் படிவக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Bio-remediation Techniques Phytoremediation, Constructed with Wellands in Ward No.2 Burial Ground Near pallam at No.04.Veerapandi Town Panchayat | ரூ.4.20/– | 4,200/– | 750/- + 18%GST |

இடம்:– எண்.04.வீரபாண்டிபேரூராட்சிஅலுவலகம்
நாள்:– 10.11.2021.

(ஒப்பம்) 10/11/21
செயல்அலுவலர்,
எண்.04.வீரபாண்டிபேரூராட்சி,
கோயம்புத்தூர் –641019.

பெறுநர் – பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள்

நகல்:– 1. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகம், கோவை –18.
2. இளநிலை பொறியாளர், பெரியநாயக்கன்பாளையம் தொகுதி,
3. அலுவலகவிளம்பரப் பலகைக்கு
4. செயல்அலுவலர் காரமடை, கூடலூர், பெ.நா.பாளையம், N.S.N.பாளையம் பேரூராட்சி



COIMBATORE DISTRICT - NO.04.VEERAPANDI TOWN PANCHAYAT
Bio-remediation Techniques Phytoremediation,
Constructed with Wellands in Ward No.2 Burial Ground Near pallam
Estimate cost Rs.4.20 Lakhs




COIMBATORE DISTRICT - NO.04.VEERAPANDI TOWN PANCHAYAT
Bio-remediation Techniques Phytoremediation,
Constructed with Wellands in Ward No.2 Burial Ground Near pallam
Estimate cost Rs.4.20 Lakhs



COIMBATORE DISTRICT - NO.04.VEERAPANDI TOWN PANCHAYAT
Bio-remediation Techniques Phytoremediation,
Constructed with Wellands in Ward No.2 Burial Ground Near pallam
Estimate cost Rs.4.20 Lakhs

# எண் 4 வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு/திருமதி. கு.வீரபாண்டியன்

ந.க.எண் : 547/2021

நாள்:22-11-2021

க.உரிமம்.எண்:181 /2021-2022

**பொருள்:** கட்டிட உரிமம் எண் 4 வீரபாண்டி பேரூராட்சி வார்டு எண் : WD-07, ஸ்ரீ விஷ்ணு நகர் கட்டிட சர்வே எண் : 359/1 359/2, மனை எண் : --ல் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை:

திரு/திருமதி : பி.ராதிகா, 10, வி.சி.மில் ரோடு, அண்ணா நகர், நாய்க்கனூர், எண்.04.வீரபாண்டி, கோயம்புத்தூர்-641019

த/பெ,க/பெ :- என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண் :181 நாள் :18-11-2021

ஆணை:

எண் 4 வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண் : 359/1 359/2, மனை எண் : - - ல் , திரு/திருமதி : பி.ராதிகா, 10, வி.சி.மில் ரோடு, அண்ணா நகர், நாய்க்கனூர், எண்.04.வீரபாண்டி, கோயம்புத்தூர்-641019 ., த/பெ,க/பெ : - என்பவர் தரைதளம் 1237.00 சுச.அ / ச.அ , தார்சு கட்டிடம் கட்டிக்கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார். வரைபடம் நகல் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 22-11-2021 முதல் ஐந்து வருட காலத்திற்கு அதாவது 21-11-2026 வரை அமுலில் இருக்கும்.
2. இவ்வனுமதி பெற்ற கட்டிடம், கட்டி முடிக்கப்பட்ட தேதியை, கட்டிட வேலை முடிந்து பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தவும்.
3. சர்க்கார் நிலத்திலும் பொதுச்சாலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.
4. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.
5. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுப்பித்துக் கொள்ள உரிய உரிமக்கட்டணம் செலுத்தி உரிம காலத்திற்கு 7(ஏழு) நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
6. அங்கீகாரம் பெறப்பட்ட வரைபடத்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் திருத்திய வரைபடங்கள் சமர்ப்பித்து முழு அங்கீகாரம் பெற்று கட்டிட வேலை செய்யவேண்டும்.
7. கட்டிட வேலைநடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லதக்கதல்ல.
9. உரிமக்கட்டுப்பாட்டிற்கும் உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும், நகராட்சிச் சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்டத் திட்டங்களுக்கு மாறாகவோ உரிமம் பெற்றிருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.
10. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுப்பாதையில் விடாமல் உரிமைத்தாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
11. மனைப்பிரிவிற்குத் தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்கவேண்டும். இந்த நிலப்பிரிவில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அமைத்து வசதிகளையும் செய்யாததால் தேவையான வசதிகளை செய்ய விகிதாச்சார முறையில் விண்ணப்பதாரர் செலுத்திபுள்ள இத்தொகை வசதிகளை செய்ய ஒரு பகுதித் தொகையைத் தான் எடுத்துக்கொள்ளப்படும். எடுத்துக் கொள்ளப்பட்ட தொகை போதவில்லையெனில் கூடுதலாக இப்பேரூராட்சியல நிர்ணயம் செய்யப்படும் தொகையினை விண்ணப்பத்தாரர் செலுத்த வேண்டும்.
12. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனையிடத்தின் சொந்தகாரரும் தொகை செலுத்திய பின்னரே அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலகத்தலிருந்து இவ்வசதிகளைச் செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது.
13. சமையலறையில் புகைபோக்கி அமைக்கவேண்டும்.
14. முறையான வடிகால் வசதி அமைக்கவேண்டும்.
14. கண்டிப்பாக மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.
15. அனுமதி கோரும் இடம் குறித்து நீதிமன்றத்தின் வழக்கு இருப்பினும் வில்லங்கம் ஏதாவது இருப்பினும் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல.
16. மனைப்பிரிவில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி இருப்பினும் அப்பகுதியின் வளர்ச்சியை கணக்கில் கொண்டும், பேரூராட்சியின் நிதி வசதிக்குட்பட்டும், மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். அடிப்படை வசதிகள் குறித்து தனியாகவோ, கூட்டாகவோ பேரூராட்சிக்கு எவ்விதத்திலும் எந்த ஒரு நிர்பந்தமும் செய்தல் கூடாது.
17. சூரிய ஒளி மூலம் குளிர் நீரை வெந்நீராக்கும் கருவி பொருத்தப்பட வேண்டும்.
18. திடக்கழிவு மேலாண்மையின்ன கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

20 கட்டிடம், சாலையிலிருந்து 10 அடியும் மற்ற பக்கங்களில் சுற்றிலும் 5 அடியும் இடைவெளி விட்டு கட்டப்பட வேண்டும்.

21 அரசு ஆணை (நிலை) எண்.79 நகராட்சியின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி) நாள் 16.06.2000 கீழ் உள்ள விதி முறைகளுக்குட்பட்ட அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும். எனவே அக்கோரிக்கையினை முன்னிருத்தக்கூடாது.

22 நிலக்கரி சாம்பலில் தயார் செய்யப்பட்ட நவீன இரக செங்கல் பயன்படுத்த வேண்டும்.

23 இக்கட்டிட உரிம அனுமதியானது விவசாய குடியிருப்பு பயன்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. விவசாய குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் பட்சத்தில் இக்கட்டிட உரியம் ரத்து செய்யப்படும்.

24 இக்கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ள விவசாய நிலத்தில் கூடுதலாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி ஏதும் வழங்கப்படமாட்டாது.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் ஒன்று நகல்

பெறுநர்,


**திரு/திருமதி : பி.ராதிகா, 10, வி.சி.மில் ரோடு, அண்ணா நகர்,**
**நாய்க்கனூர், எண்.04.வீரபாண்டி, கோயம்புத்தூர்–641019**
**த/பெ,க/பெ : – ,**
**WD-07,ஸ்ரீ விஷ்ணு நகர்**

செயல் அலுவலர்
எண் 4 வீரபாண்டி பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்


நகல் : வரி வசூலர், எண் 4 வீரபாண்டி பேரூராட்சி.
( கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக. )

கோவை மாவட்டம் எண்:4 வீரபாண்டி பேரூராட்சி

வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு







கட்டிட உரிமம் எண்-155-2020-21

நெ.4 வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட
'RATHIS VALLEY' நகரில் மழைநீர் சேகரிப்பு தொட்டி
அமைக்ககப்பட்டுள்ளது.

உரிமையாளர் திருமதி .R.M.அன்புச்செல்வி

